**செய்தி வெளியீடு எண்: 564** **நாள்: 23.08.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (23.8.2018) தலைமைச் செயலகத்தில், 2018–2019ஆம் கல்வியாண்டில் 11 மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்கள் மற்றும் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவியர்கள் ஆகியோருக்கு 437 கோடியே 86 லட்சம் ரூபாய் செலவில் 11,78,790 விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக 9 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்கள்.

தமிழகத்தில் பெண் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில், மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மாணவியர் அனைவருக்கும் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் 2001–2002ஆம் கல்வி ஆண்டில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது. பின்பு, 2005–2006ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11–ஆம் வகுப்பு பயிலும் அனைத்து பிரிவு மாணவ, மாணவியருக்கும் இத்திட்டத்தின் கீழ் மிதிவண்டிகள் வழங்கப்பட்டு மாணவ, மாணவியர் பெருமளவில் பயனடைந்து வருகின்றனர்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, 11 மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை சீரிய முறையில் தொடர்ந்து செயல்படுத்திடும் விதமாக, 2018–2019ஆம் கல்வியாண்டில், 437 கோடியே 86 லட்சம் ரூபாய் செலவில் 11 மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் 5,06,132 மாணவர்கள், 6,49,758 மாணவியர்கள் மற்றும் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் 18,506 மாணவர்கள், 4,394 மாணவியர்கள், என மொத்தம் 11,78,790 மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 9 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன், மாண்புமிகு

தொழிலாளர் நலத் துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி வி.எம்.ராஜலட்சுமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி சீ.வளர்மதி மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஒட்டெம் டாய், இ.ஆ.ப., தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திரு. ஆ.கார்த்திக், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**